**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், செங்கல்பட்டு**

**OS.No.716/2023** **C.W.1**

(சாட்சிக்கு திரு.V.பிரதாப், உதவியாளர் அவர்களால் சாட்சி பிரமாணம் செய்யப்பட்டது)

| | |
|---|---|
| பெயர் | சிவகுமார் |
| த/பெ. | அருணாச்சலம் |
| வயது | 55 |
| வசிப்பிடம் | முதன்மை மாவட்ட நீதிமன்றம், புதுச்சேரி |
| தொழில் | நகல் எடுப்பவர் |

**முதல் விசாரணை 21.11.2025**

நான் புதுச்சேரி முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் நகல் எடுப்பவராக பணியாற்றி வருகிறேன். புதுச்சேரி மாநிலத்தில் நகல் எடுப்பவர் தான் நீதிமன்ற கட்டளை வகையறாக்களை சார்வு செய்யும் வழக்கம் உள்ளது. அதன்படி முதன்மை மாவட்ட நீதிமன்ற உத்தரவு படி 04.07.2025 அன்று அசல் வழக்கு எண்.716/2023-ல் 5ம் பிரதிவாதியான பரிமளா க/பெ.அன்பழகன், எண்.60, தென்றல் நகர், 3வது குறுக்கு தெரு, சாரம், பாண்டிச்சேரி என்ற முகவரியில் வசித்து வரும் மேற்படியருக்கு நீதிமன்ற அழைப்பானை சார்வு செய்வதற்காக நான் சென்றேன். அவர் மேற்படி முகவரியில் இருந்தார். அவரிடம் செங்கல்பட்டு கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் இருந்து அழைப்பானை வந்திருப்பதாகவும் அதனை பெற்றுக் கொள்ளவும் சொன்னேன். அவர் அழைப்பானையில் உள்ள பெயர், விவரத்தை கேட்டார். நான் சொன்னேன். அந்த விவரத்தை கேட்டுவிட்டு அழைப்பானையை வாங்க மறுத்துவிட்டார். அவரிடம் நீங்கள் வாங்க மறுத்துவிட்டால் அழைப்பானையை வீட்டின் சுவரில் ஒட்டுவேன் என்று கூறியபோது அவர் அதனை ஒட்டக்கூடாது என்று கூறிவிட்டார். எனவே அழைப்பானையை வாங்க மறுத்துவிட்டதால் அது குறித்து அழைப்பானையில் எழுதி அழைப்பானையை நாசர் பிரிவு மேலாளரிடம் ஒப்படைத்தேன். மேற்படி சம்மன் நீ.ம.சா.ஆ.1. நான் செய்துள்ள மேல் எழுத்து நீ.ம.சா.ஆ.2.